முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: **845**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.01.2022**, வெள்ளிக்கிழமை

1. அருட்குருவாக வந்த அண்ணலே
அன்னதான சேவையாற்றும் வள்ளலே
இருள் நீக்கி இந்த கலியுகத்தை
இணையில்லா சரவணச்சுடரேற்றி காக்க வந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பெருமைபட ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் பிலவ கலை திங்கள் தன்னில்
(பிலவ வருடம் தை மாதம் 8ம் நாள், 21.01.2022 வெள்ளிக்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் திருநாமம்
தரணியோர்க்கு வேதமாக வழிகாட்ட நேரும்
மண்ணுலகில் அரங்கன் தர்மமே
மக்களுக்கு மகா வழிகாட்டியாக துணை நிற்கும்
4. நிற்கவே அரங்கன் கொள்கையோடு
நிலமதனில் எவர் தர்மத்தை கடைபிடித்து வருகின்றாரோ
வருகின்ற மக்கள் மூலமே
வையகத்தில் ஞான ஆட்சி மலரக்கூடும்
5. தருகின்ற அரங்கன் ஞானம் வழியே
தரணியே ஞான லோக மாற்றம் பெறும்
மாற்றம் செய்யவேண்டி வந்த
மாதவசி உந்தனுக்குள் ஆறுமுகன்
6. ஆற்றல்பட இருந்து இயக்கி வர
அரங்கனை கண்ட மக்களுக்கெல்லாம்
ஆறுமுகன் என் ஆசியும்
காட்சியும் உண்டு உண்டு
7. உண்டான அரங்கன் தர்மத்தை கடைபிடித்து
உலகமெங்கும் சேவையாற்றும் தொண்டர்கள் மூலமாக
கொண்டதொரு தண்டாயுதன் யான் அருள்புரிந்து
குவலயத்தை ஞான உலகமாக மாற்றம் செய்வேன்

8. மாற்றம் தர வேண்டியே அரங்கனுக்கு நித்தம்நித்தம்
மகா சக்தி யானும் வழங்கிவர
ஆற்றல்பட அரங்கனுள் என் சக்தி அதீதமாய் அளவு கூட
அப்பனே அரங்கனுக்கு உஷ்ணநிலை கூடநேரும்

9. கூடுகின்ற இந்த நிலைகளை
குளிர்விக்க அரங்கன் தொண்டர்கள்
நாடெங்கிலும் அரங்கன் பேரில் நாமஜெபம்
நன்மைபட தொடர்ந்து செய்து வர

10. வருகவே அரங்கன் பேரில் தொடரும்
வல்லமையான தர்மத்தாலும் அரங்கனுக்கு குளிர்ச்சி
மேலும் சக்தி நிலை கூடி ஐயமற
ஆறுமுகன் என் தயவோடு அற்புதங்கள் நிகழக்கூடும்

11. கூடவே ஓங்காரக்குடில் நோக்கி
குவலயத்தார் தொடர்ந்து வந்து அருளாசி பெற
ஈடேற்றம் உலகம் ஞான யுகமாற்றமாக
இனிதே சடுதி காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிகரின் சார்பாக உலகமெங்கும் அன்பர்கள் அன்னதானம் செய்தால் அரங்கமகாதேசிகருக்கு நோயில்லா வாழ்வும் நீடிய ஆயுளும் உண்டாகும்.

அன்பர்கள் முருகப்பெருமான் திருவடியை பக்தியுடன் பூசித்து ஓங்காரக்குடிலாசானுக்கு நோயில்லா வாழ்வும், நீடிய ஆயுளும் பெற வேண்டும் என வேண்டிக் கொள்ள வேண்டும்.

சைவத் தலைவன் வேலனை போற்றிட
வையகம் போற்ற வாழ்வார் நலமே

–முருகனடிமை ஓங்காரக்குடிலாசான்.